# பழங்குடிகள் மற்றும் டோரஸ் நீரிணைத் தீவு மக்களின் குரல் பற்றிய பொதுசன வாக்கெடுப்பு

விரைவில் அவுஸ்திரேலியர்கள் பொதுசன வாக்கெடுப்பில் வாக்களிக்கக் கோரப்படுவார்கள். அரசியலமைப்பில் பழங்குடியினர் மற்றும் டோரஸ் நீரிணைத் தீவு மக்களின் பாராளுமன்றத்துக்கான குரல் இருக்க வேண்டுமா என்று பொதுசன வாக்கெடுப்பு கேட்கும். பாராளுமன்றம் என்பது அவுஸ்திரேலியாவுக்கான சட்டங்களை உருவாக்கும் அமைப்பாகும்.

## பாராளுமன்றத்திற்கான குரல் என்றால் என்ன?

குரல் என்பது பழங்குடியினர் மற்றும் டோரஸ் நீரிணைத் தீவு மக்கள் அவர்களைப் பாதிக்கும் சட்டங்கள் குறித்து அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குவதற்கான ஒரு வழியாகும். அரசியலமைப்பில் குரல் பற்றி எழுதுவது என்பது, பழங்குடியினர் மற்றும் டோரஸ் நீரிணைத் தீவு மக்களைப் பாதிக்கும் பிரச்சினைகள் தொடர்பாக அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குவதில் குரல் நிரந்தர பங்கைக் கொண்டிருக்கும் என்பதாகும். பழங்குடியினர் மற்றும் டோரஸ் நீரிணைத் தீவு மக்கள் அரசியலமைப்பு ரீதியாக அங்கீகரிக்கப்படுவதற்கும், அவர்களின் கலாச்சாரம் அங்கீகரிக்கப்படுவதற்கும், கொண்டாடப்படுவதற்கும் பாராளுமன்றத்திற்கான குரல் ஒரு வாய்ப்பாக இருக்கும்.

## பழங்குடியினர் மற்றும் டோரஸ் நீரிணைத் தீவு மக்கள் ஏன் பாராளுமன்றத்தற்கான ஒரு குரலைக் கேட்கிறார்கள்?

பழங்குடியினர் மற்றும் டோரஸ் நீரிணைத் தீவு மக்கள் சுமார் 100 ஆண்டுகளாக அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்று கேட்டு வருகின்றனர். பழங்குடியினர் மற்றும் டோரஸ் நீரிணைத் தீவு மக்கள் தங்கள் சமூகங்களையும் கலாச்சாரத்தையும் நன்கு அறிவார்கள். பழங்குடியினர் மற்றும் டோரஸ் நீரிணைத் தீவு மக்கள் நியாயமான, சமமான அனுபவத்தை உருவாக்கக்கூடிய அவர்களின் சமூகங்கள் எதிர்கொள்ளும் சவால்களைச் சந்திப்பதற்கான சிறந்த தீர்வுகளை அறிந்திருக்கிறார்கள்.

## பாராளுமன்றத்திற்கான குரல் என்ன செய்யும்?

குரலானது பழங்குடியினர் மற்றும் டோரஸ் நீரிணைத் தீவு மக்களின் வாழ்க்கையைப் பாதிக்கும் விடயங்கள் தொடர்பான அறிவுரைகளுக்கு செவிசாய்ப்பதனூடாக, பழங்குடியினர் மற்றும் டோரஸ் நீரிணைத் தீவு மக்களைப் பாதிக்கும் விடயங்கள் பற்றி அரசாங்கம் நல்ல முடிவுகள் எடுக்க முடியும்.

## பாராளுமன்றத்திற்கான குரலைப் பிரதிநிதித்துவப்படுத்துபவர் யார்?

தொலைதூரப் பகுதிகள் உட்பட ஒவ்வொரு மாநிலம் மற்றும் பிரதேசத்தைச் சேர்ந்த பழங்குடியினர் மற்றும் டோரஸ் நீரிணைத் தீவு மக்கள் குழுவின் குரல் இருக்கும். அவர்களின் உள்ளூர் பகுதியில் உள்ள பழங்குடியினர் மற்றும் டோரஸ் நீரிணைத் தீவு மக்களால் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.



அங்கீகரிப்பது: Tabatha Feher, Life Without Barriers, L6, 107 Pitt St, Sydney, NSW.

## பழங்குடியினர் மற்றும் டோரஸ் நீரிணைத் தீவு மக்களிடம் பாராளுமன்றத்திற்கான குரல் குறித்து ஆலோசனை கேட்கப்பட்டுள்ளதா?

ஆயிரக்கணக்கான பழங்குடியினர் மற்றும் டோரஸ் நீரிணைத் தீவு மக்கள் பல ஆண்டுகளாக குரல் ஏன் தேவை என்றும் அது எவ்வாறு செயல்பட வேண்டும் என்றும் ஆலோசனைகளை வழங்கியுள்ளனர். 80%க்கும் அதிகமான பழங்குடியினர் மற்றும் டோரஸ் நீரிணைத் தீவு மக்கள் பாராளுமன்றத்திற்கு ஒரு குரல் கொடுப்பதை ஆதரவளிக்கின்றனர்.

## சட்ட வல்லுநர்கள் என்ன சொல்கிறார்கள்?

மத்திய அரசைப் பிரதிநிதித்துவப்படுத்துபவர்கள் உட்பட அரசியலமைப்பு வழக்கறிஞர்கள், குரல் சட்டப்பூர்வமாக உறுதியானது என்றும்,ஆட்சி அமைப்பை மேம்படுத்தும் என்றும் கூறியுள்ளனர்.

## குரலால் சட்டங்களை உருவாக்க முடியுமா?

இல்லை. குரலுக்கு சட்டங்களை இயற்ற அதிகாரம் இருக்காது. இது பழங்குடியினர் மற்றும் டோரஸ் நீரிணைத் தீவு மக்களைப் பாதிக்கும் விஷயங்களில் ஆலோசனைகளை மட்டுமே வழங்கும்.

## பழங்குடியினர் மற்றும் டோரஸ் நீரிணைத் தீவினரின் குரல் வாக்கெடுப்பு என்ன கேள்வியைக் கேட்கும்?

முன்மொழியப்பட்ட சட்டம்: பழங்குடியினர் மற்றும் டோரஸ் நீரிணைத் தீவினரின் குரலை நிறுவுவதன் மூலம் அவுஸ்திரேலியாவின் பழங்குடியினர் மற்றும் டோரஸ் நீரிணைத் தீவு மக்களை அங்கீகரிப்பதற்காக அரசியலமைப்பை மாற்றுதல் இந்த முன்மொழியப்பட்ட மாற்றத்தை நீங்கள் அங்கீகரிக்கிறீர்களா?"

## பொதுசன வாக்கெடுப்பில் நான் எவ்வாறு வாக்களிக்க வேண்டும்?

பொதுசன வாக்கெடுப்பு என்பது தேர்தல் போன்றது. நீங்கள் 'YES' என்று வாக்களித்தால், பழங்குடியினர் மற்றும் டோரஸ் நீரிணைத் தீவு மக்கள் நேரடியாக அவர்களைப் பாதிக்கும் விஷயங்களில் குரல் கொடுக்க வேண்டும் என்பதை ஒப்புக்கொள்கிறீர்கள்.

## பெரும்பான்மையான மக்கள் YES (ஆம்) என வாக்களித்தால் என்ன நடக்கும்?

பெரும்பான்மையான மக்கள் குரலுக்கு Yes என வாக்களித்தால், அரசாங்கம் பழங்குடியினர் மற்றும் டோரஸ் நீரிணைத் தீவு மக்களுடன் கலந்து ஆலோசித்து, கொள்கையை முடிவு செய்து குரல் அமைப்பதற்குப் பொருத்தமான சட்டங்களை இயற்றும்.


அங்கீகரிப்பது: Tabatha Feher, Life Without Barriers, L6, 107 Pitt St, Sydney, NSW.

## பெரும்பான்மையான மக்கள் NO (இல்லை) என வாக்களித்தால் என்ன நடக்கும்?

பெரும்பான்மையான மக்கள் No என்று வாக்களித்தால், எதுவும் மாறாது. பழங்குடியினர் மற்றும் டோரஸ் நீரிணைத் தீவு மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடரும். ‘No’ என்று வாக்களித்தால், நீங்கள் குரல் வேண்டாம் என்று வாக்களிப்பீர்கள், இந்த வாக்கெடுப்பில் பழங்குடியினர் மற்றும் டோரஸ் நீரிணைத் தீவு மக்களை ஆதரிப்பதற்கு வேறு வழி இல்லை.

## மேலதிக தகவலை நான் எங்கே பெறுவது?

மேலதிக தகவல்

www.lwb.org.au



அங்கீகரிப்பது: Tabatha Feher, Life Without Barriers, L6, 107 Pitt St, Sydney, NSW.